தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 3, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 16, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

இயல்பாகச் சமனாக நின்று தன்கண் வைத்த பொருளின் நிறையை வரையறுத்துக் காட்டும் துலாக்கோல் போல மனத்திற் சமநிலையாக இருந்து ஒரு பக்கஞ்சாயாது உண்மையுரைத்தல் அறிவு நிறைந்தோர்க்கு அழகாம்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் 13–3–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் பாபநாசம் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1950 முதல் 1952 வரை பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள். வினா எண் 161, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

161—

மின் சமிக்ஞை

***33360—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் மின் சமிக்ஞை அமைக்கப்பட்டும் செயல்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த மின் சமிக்ஞைப் போக்குவரத்தை நெறிமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) விருத்தாசலம் நகரம், பாலக்கரை ரவுண்டானாவில் அமைக்கப்பட்டிருந்த மின் சமிக்ஞை*—Electrical signal—*பழுது நீக்கம் செய்யப்பட்டு 25–6–2004 முதல் நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*